பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 173

திங்கட்கிழமை
19 மே 2025

வைகாசி 05 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

**எங்கள் வலியும் தொடர்கிறது போராட்டமும் தொடர்கிறது!**

விரிவு பக்:- 03



## உயிர்நீத்தவர்களின் கனவுகள் நனவாக முள்ளிவாய்க்காலில் உறுதிபூணுவோம்

### கொள்கைப் பிரகடனத்தில் அறைகூவல்

யாழ்ப்பாணம், மே 19
முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு தாயகத்திலும், புலம்பெயர் தேசங்களிலும் நேற்று உணர்வெழுச்சியுடன் முன்னெடுக்கப்பட்டிருந்த நிலையில், பிரதான நினைவேந்தல் நிகழ்வு நடைபெற்ற முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தில், முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் பொதுக் கட்டமைப்பால் முள்ளிவாய்க்கால்

11

# முள்ளிவாய்க்கால் மண் மூழ்கியது கண்ணீரில்

### தமிழ் மக்கள் ஒன்றுகூடி உணர்வுபூர்வ அஞ்சலி

யாழ்ப்பாணம், மே 19
கொடூரமான முறையில் நடத்தப்பட்ட இறுதிப்போரில் கொல்லப்பட்ட தமிழ் மக்களை நினைவேந்தும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு தாயகத்திலும், புலம்பெயர் தேசங்களிலும் உணர்வெழுச்சியுடன் நேற்று முன்னெடுக்கப்பட்டது. நினைவேந்தலின் பிரதான நிகழ்வு முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தில் ஆயிரக்கணக்கானவர்களின் பங்கேற்புடன் உணர்வுபூர்வமாக நடைபெற்றது.

11

## பொறுப்புக்கூறலை வலியுறுத்த எடுக்கும் முயற்சிக்கு ஆதரவு

### கனடாவின் புதிய பிரதமர் தெரிவிப்பு



கொழும்பு, மே 19
இலங்கை அரசாங்கத்திடம் பொறுப்புக்கூறலை வலியுறுத்துவதற்கு சர்வதேச சமூகம் எடுக்கும் முயற்சிகளுக்கு கனடா தொடர்ந்து ஆதரவளிக்கும் என கனடாவின் புதிய பிரதமர் மார்க் கார்னி தெரிவித்துள்ளார்.
நேற்று முள்ளிவாய்க்கால் நினைவேந்தலின் பதினாறாவது நினைவு தினத்தையொட்டி

10

## நீதி நிறைவேற்றப்படும் வரையில் போராடும் வலிமை பெறுவோம்

### கனேடியப் பேரவை தெரிவிப்பு

விரிவு பக்:- 05

## தூதுவர்களைச்சந்திக்கும் தமிழ்த் தேசியப் பேரவை

யாழ்ப்பாணம், மே 19
தமிழ்த் தேசியப் பேரவைக்கும் வெளிநாட்டு இராஜதந்திரிகளுக்கும் இடையே நாளை செவ்வாய்க்கிழமை சந்திப்புகள் நடைபெறவுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.
கடந்த மார்ச் மாதம் 28 ஆம் திகதி வடக்கு மாகாணத்தில் சுமார் 6 ஆயிரம் ஏக்கர் காணிகளைச் சுவீகரிக்கும் வர்த்தமானி அரசாங்கத்தால் வெளியிடப்பட்டிருந்தது. அந்தக் காணிகளுக்குரிய மக்கள் நாட்டின் பல இடங்களிலும், வெளிநாடுகளிலும் இடம்பெயர்ந்துள்ள நிலையில், மூன்று மாத காலப் பகுதிக்குள் அடையாளப்படுத்தல்களை மேற்கொள்ள முடியாத

10

## போர்வீரர் நினைவுதினம்; நிகழ்வில் அநுர பங்கேற்பு

கொழும்பு, மே 19
இன்று நடைபெறவுள்ள இலங்கையின் தேசிய போர் வீரர் நினைவுதின நிகழ்வில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க பங்கேற்பார் என்று தேசிய இராணுவ சேவை அதிகார சபையின் தலைவர் செனரத் கோஹன்ன தெரிவித்துள்ளார். உள்நாட்டுப் போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட மே 19 ஆம் திகதியன்று இலங்கை அரசாங்கங்கள், தேசிய போர்வீரர் நினைவுதின நிகழ்வை நடத்திவருகின்றன. இந்தமுறை நடைபெறும் நிகழ்வில் ஜனாதி

11



## மன்னாரில் கரையொதுங்கிய சடலம்

மன்னார், மே 19
மன்னார், அச்சங்குளம் கடற்கரையில் ஆண் ஒருவரின் சடலம் கரையொதுங்கியுள்ளது.
முற்றிலும் சிதை

11

### முச்சந்தி முரளி

‘போர்வீரர் தினத்திலும் ஏட்டிக்குப் போட்டிதான் போல’

## திடீரென மயங்கி வீழ்ந்து இளைஞர் சாவு!

யாழ்ப்பாணம், மே 19
யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணையில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ள நிலையில், அவரது உடலில் இருந்து பெறப்பட்ட மாதிரிகள் ஆய்வுக்காகக் கொழும்புக்கு அனுப்பப்பட்டுள்ளன.
வண்ணார்பண்ணையைச் சேர்ந்த 29 வயதான இளைஞர் ஒருவரே உயிரிழந்தவராவார்.
இவரது குடும்பத்தினர் கடந்த 16ஆம் திகதி உறவினரின் திருமண நிகழ்வுக்காகச் சென்றிருந்த நிலையில், இவர்

11

## பெரமுனவின் ஏற்பாட்டிலும் படைவீரர் நினைவு தினமாம்



கொழும்பு, மே 19
இலங்கை பாதுகாப்பு அமைச்சின் ஏற்பாட்டில் தேசிய படைவீரர் நினைவுதினம் இன்று நடைபெறும் நிலையில், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியும் படை வீரர் நினைவு தினத்தை நடத்தவுள்ளது.
முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜ

11



| கொவிசெத | |
|---|---|
| திகதி | 18.05.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4075 |
| ஆங்கில எழுத்து | Q |
| வெற்றி இலக்கங்கள் | 01 30 39 73 |
| விசேட எழுத்து | Q |

| ஹந்தஹண ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 18.05.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1142 |
| வெற்றி இலக்கினம் | கடகம் |
| வெற்றி இலக்கங்கள் | 04 23 30 41 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 18.05.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0101 |
| ஆங்கில எழுத்து | B |
| வெற்றி இலக்கங்கள் | 4 1 6 6 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 18.05.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2181 |
| ஆங்கில எழுத்து | E |
| சுப்பர் இலக்கம் | 20 |
| வெற்றி இலக்கங்கள் | 47 60 67 71 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 18.05.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 5833 |
| ஆங்கில எழுத்து | L |
| வெற்றி இலக்கங்கள் | 1 1 8 1 4 9 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 18.05.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1863 |
| ஆங்கில எழுத்து | L |
| வெற்றி இலக்கங்கள் | 02 23 47 62 |
| விசேட எழுத்து | L |

| அத சம்பத | |
|---|---|
| திகதி | 18.05.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0408 |
| ஆங்கில எழுத்து | L |
| வெற்றி இலக்கங்கள் | 8 1 4 9 |

# ஜெனிவாவுக்கு அமைச்சர் நளிந்த

கொழும்பு,மே 19
சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ நேற்றுக் காலை சுவிட்சர்லாந்துக்கு விஜயம் மேற்கொண்டுள்ளார்.

உலக சுகாதார அமைப்பின் 78ஆவது வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் பங்கேற்பதற்காக அவர் சுவிட்சர்லாந்துக்கு சென்றுள்ளார் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. குறித்த மாநாடு இன்று முதல் எதிர்வரும் 27 ஆம் திகதி வரை சுவிட்சர்லாந்தின் ஜெனிவாவில் நடைபெறவுள்ளது. (ச-இ)


## செம்மணி இந்துமயான அபிவிருத்திச்சபை

பதிவு இல.HA / 4 / JA / 266
393 /30, கோயில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

## பொதுக்கூட்ட அறிவித்தல்

- காலம் : 01.06.2025 ஞாயிற்றுக்கிழமை
- நேரம் : காலை 09.00 மணி
- இடம் : செம்மணி இந்துமயான மண்டபம்
- தலைவர் : திரு.லயன்.சி.இலட்சுமிகாந்தன்

புதிய நிர்வாக சபை தெரிவு
அனைவரையும் கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

(CS/58253)J-1

செம்மணி இந்துமயான அபிவிருத்திச் சபையினர்.


| சுபிரி தன சம்பத | | |
|---|---|---|
| திகதி | தினம் | வெற்றி வாரம் |
| 18.05.2025 | ஞாயிற்றுக்கிழமை | 0541 |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | |
| E | 8 8 5 4 4 6 | |

| Super Ball DLB | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 18.05.2025 | ஞாயிற்றுக்கிழமை | |
| சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
| 2807 | S | 24 30 54 56 |

| சனிதா DLB | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 18.05.2025 | ஞாயிற்றுக்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| Q | 12 14 57 64 | 4968 |

| SASIRI DLB | |
|---|---|
| திகதி | தினம் |
| 18.05.2025 | ஞாயிற்றுக்கிழமை |
| வெற்றி வாரம் | வெற்றி இலக்கம் |
| 0685 | 17 19 25 |

| லக்ன ராசி DLB | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 18.05.2025 | ஞாயிற்றுக்கிழமை | |
| மகரம் | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
| ♑ | 15 45 46 49 | 4519 |

| KAPRUKA DLB | | | |
|---|---|---|---|
| திகதி | தினம் | | |
| 18.05.2025 | ஞாயிற்றுக்கிழமை | | |
| ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| Q | 11 | 18 22 43 57 | 1983 |

| அத கோடிபதி DLB | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 18.05.2025 | ஞாயிற்றுக்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| R | 07 12 34 59 | 2633 |






# தென்னக்கோனுக்கு அழைப்பு

கொழும்பு,மே 19
பணி இடைநீக்கம் செய்யப்பட்ட பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனை, பதவியின் அதிகாரங்களைத் துஷ்பிரயோகம் செய்தமை தொடர்பில் விசாரணை செய்து அது தொடர்பாக அறிக்கை சமர்ப்பிப்பதற்காக நியமிக்கப்பட்ட விசாரணை ஆணைக்குழுவில் இன்று முன்னிலையாகுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, குழுவின் முதற்கட்ட விசாரணைப் பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன என்று நாடாளுமன்ற தொடர்பாடல் பிரிவு தெரிவித்துள்ளது. (ச-இ)

# அரசியற்கைதிகளுக்கு விடுதலை வழங்குங்கள்

## முள்ளிவாய்க்காலுக்கு வந்த ஊர்தி

கிளிநொச்சி,மே 19
அரசியற்கைதிகளை விடுவிக்குமாறு கோரி முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் இடத்தை நோக்கி நேற்று ஊர்திப்பவனி முன்னெடுக்கப்பட்டது.

போர் முடிந்து 16வருடங்கள் ஆகின்ற நிலையில் அரசியற் கைதிகளை முழுமையாக விடுவிக்க வலியுறுத்தியும் சர்வதேச விசாரணையை வலியுறுத்தியும் கரைச்சிப் பிரதேசசபையின் முன்னாள் உறுப்பினர் சண்முகராசா ஜீவராசாவால் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் இடத்தை நோக்கி தருமபுரம் பகுதியிலிருந்து இந்த ஊர்திப்பவனி முன்னெடுக்கப்பட்டது. (ச-113)

# வருகிறார் பஸில்



கொழும்பு,மே 19
ஜனாதிபதித் தேர்தலுக்குப் பிறகு அமெரிக்கா பறந்த ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியின் ஸ்தாபகர் பஸில் ராஜபக்ச நாடு திரும்பவுள்ளார்.

இதற்கமைய எதிர்வரும் 22 ஆம் திகதி அவர் இலங்கை வருவார் எனக் கட்சி வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது. அதேவேளை, கட்சியை வழிநடத்தும் பொறுப்பை நாமல் ராஜபக்சவிடம் ஒப்படைத்துவிட்டதால், நேரடி அரசியல் செயற்பாட்டில் பஸில் ராஜபக்ச பங்கேற்கமாட்டார் எனவும் அறிய முடிகின்றது. (ச-44)





# மன்னார் மருத்துவமனை முன்பாக முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்

மன்னார்,மே 19
மன்னாரில் தமிழீழ விடுதலை இயக்கம் ரெலோ ஏற்பாடு செய்த முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு நேற்று ஞாயிற்றுக்கிழமை மன்னார் மாவட்ட பொது மருத்துவமனைக்கு முன்பாக இடம்பெற்றது.

தமிழீழ விடுதலை இயக்கம் ரெலோ கட்சியின் தலைமைக்குழு உறுப்பினர் ஏ.ரி.மோகன்ராஜ் தலைமையில் குறித்த நினைவேந்தல் நிகழ்வு இடம்பெற்றது. இதன் போது இறுதியுத்தத்தின்போது முள்ளிவாய்க்காலில் உயிர்நீத்த உறவுகளை நினைவுகூர்ந்து சுடர் ஏற்றப்பட்டு மலர்தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. (ச-56)



# எங்கள் வலியும் தொடர்கிறது போராட்டமும் தொடர்கிறது!!

வவுனியா,மே 19

**இறுதிப்போரில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கத்தினரின் ஏற்பாட்டில் முள்ளிவாய்க்காலில் உயிர்நீத்தவர்களுக்கான அஞ்சலி நிகழ்வு நேற்று இடம்பெற்றது. அவர்கள் போராட்டம் மேற்கொள்ளும் வவுனியா வீதி அபிவிருத்தித் திணைக்களத்துக்கு முன்பாகவுள்ள கொட்டகையில் குறித்த அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது.**

இதன்போது உயிரிழந்த உறவுகளுக்காக அகவணக்கம் செலுத்தப்பட்டு,ஒளிதீபம் ஏற்றி மலரஞ்சலி செலுத்தப்பட்டது. நிகழ்வில் பங்கேற்றோர் தெரிவிக்கையில், இந்த நாள் வேதனைமிக்கது. போரின் கொடூரமான முடிவைநினைவூட்டுகிறது, அங்கு ஆயிரக்கணக்கான அப்பாவித் தமிழ் பொதுமக்கள் படுகொலைசெய்யப்பட்டனர். இன்று, முள்ளிவாய்க்கால் நாளில், உலகுக்கு நினைவூட்டுகிறோம் எங்கள் வலி தொடர்கிறது, எங்கள் போராட்டம் தொடர்கிறது, நீதி மற்றும் சுதந்திரத்துக்கான எங்கள் கோரிக்கை ஒருபோதும் அமைதியாகாது - என்றனர். (ச-110)



## விதிமுறைகள் மீறல் 3 சாரதிகள் கைது!

கிளிநொச்சி, மே 19

கிளிநொச்சி தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்லாறுப் பகுதியில் விதிமுறைகளைமீறி பயணித்த 3 டிப்பர் சாரதிகள் தருமபுரம் பொலிஸாரால் நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சட்டவிரோதமாக மணலேற்றியமை, சாரதி அனுமதிப்பத்திரமின்றிப் பயணித்தமை மற்றும் டீசலுக்குப் பதிலாக மண்ணெண்ணெயைப் பயன்படுத்தியமை உள்ளிட்ட குற்றச்சாட்டுகளில் அவர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

அவர்களை கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தருமபுரம் பொலிஸ்நிலைய பொறுப்பதிகாரி டி எம் சதுரங்க தெரிவித்துள்ளார். (ச-113)

## கஞ்சாத்தோட்டம் சுற்றிவளைப்பு

பதுளை, மே 19

கொஸ்லந்தையிலுள்ள வனப்பகுதியொன்றில் சட்டவிரோதமானமுறையில், வளர்க்கப்பட்ட கஞ்சாத் தோட்டமொன்று நேற்றுமுன்தினம் பொலிஸாரால் சுற்றிவளைக்கப்பட்டு அழிக்கப்பட்டுள்ளது.

ஒரு ஏக்கர் வனப்பகுதியில் சட்டவிரோதமாக வளர்க்கப்பட்ட கஞ்சாத்தோட்டமே, இவ்வாறு பொலிஸாரால் சுற்றிவளைக்கப்பட்டது. குறித்த கஞ்சாச் சேனையில் வளர்ந்திருந்த, சுமார் 6 அடி உயரமுள்ள 50,420 கஞ்சாச் செடிகளும், அரை ஏக்கரில் வளர்க்கப்பட்ட 04 அடி உயரமுள்ள 26,995 கஞ்சாச் செடிகளும், கொஸ்லந்த பொலிஸ் பிரிவைச் சேர்ந்த ஜனித்த குமார தலைமையில், பறிமுதல் செய்யப்பட்டு எரிக்கப்பட்டன. (ச-இ)



## மணல் அகழ்வு இருவர் கைது!

யாழ்ப்பாணம், மே 19

யாழ். அரியாலை உதயபுரம் பகுதியில் சட்டவிரோதமான முறையில் மணலகழ்வில் ஈடுபட்ட இருவர் யாழ்.போதைப் பொருள் தடுப்புப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அவர்களிடமிருந்து மணல் அகழ்வதற்குப் பயன்படுத்தப்பட்ட இரு உழவு இயந்திரங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைதுசெய்யப்பட்ட இருவரும் கொழும்புத்துறைப் பகுதியைச் சேர்ந்தவர்கள் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். சந்தேகநபர்களை மேலதிக விசாரணையின் பின் நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ச-25, 23)

## முறுக்குப் பைக்கற்றுக்குள் போதைப்பொருள்கள்

### சிறைக்கைதிக்குக் கொடுத்த பெண் கைது

கொழும்பு, மே 19

சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள கைதி ஒருவருக்கு போதைப்பொருள்களை கொண்டு சென்ற குற்றச்சாட்டில் பெண்ணொருவர் கைதுசெய்யப்பட்டு எதிர்வரும் 19 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். அவிசாவளை வீதி, கொடவத்தைப் பிரதேசத்தில் வசிக்கும் பெண் ஒருவரே இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள கைதி ஒருவரை சந்திப்பதற்கு முறுக்குப் பைக்கற்றுடன் சிறைச்சாலைக்குச் சென்றுள்ளார்.

இதன்போது சிறைச்சாலை அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் முறுக்குப் பைக்கற்றுக்குள் மிகவும் சூட்சுமமான முறையில் மறைத்துவைக்கப்பட்டிருந்த 4,674 மில்லிகிராம் ஐஸ் மற்றும் 5,625 மில்லிகிராம் ஹெரோய்ன் போதைப்பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. (ச-இ)




**'பிள்ளையை அடிச்சு வளர்க்கோணும், முருங்கையை முறிச்சு வளர்க்கோணும்' எண்டு பழைய ஆக்கள் சொல்லுவினம். ஆனால் இப்ப பிள்ளையளில பெற்றோரோ, வாத்திமாரோ கைவைச்சாலே அது பெரும் பிரச்சினையாப் போடும் எண்டது வேறகதை. எல்லாத்துக்கும் பிள்ளையளை அடிக்கிறதும், உதைக்கிறதும் பிழைதான், ஆனால் அதுக்காக பிள்ளையள் செய்யிற எல்லாத்தையும் பார்த்துக்கொண்டும் இருக்கேலாதுதானே. சிலதை அப்பப்போ கண்டிக்கோணும், சிலநேரங்களில தேவையெண்டால் தண்டிக்கவும் வேணும். அப்பிடிச் செய்யாததால தான் கனபேர் இப்ப றோட்டுகளில வாள்க ளோடை பைக்குகளில எல்லாரையும் வெட்டுறன், கொட்டுறன் எண்டு திரியினம். இப்பிடி பிள்ளைய ளையே கண்டிச்சு, தண்டிச்சு வளர்க்கேக்க, இந்த சமூகத்தையே கட்டுப்படுத்தக்கூடிய பதவியளில இருக்கிறவையையும் ஒரு பயபக்தியோட வைச்சிருந்தால்தான் ஒழுங்கா இருப்பினம். இல்லாட்டி தாங்கள்தான் பெரிய ராசா எண்ட மிதப்பில எல்லாத்தையும் நாசமாக்கிப்போடுவினம்.**

**வடமாகாணத்தில அதிலையும் குறிப்பா சனத்துக்கும், ஒப்பீஸ்காரருக்கும் பிரச்சினையள் குடுத்தவை எண்ட குற்றச்சாட்டில ஏழுபேருக்கு அவையிட்ட இருந்த பதவியைப் பறிச்சு, இப்ப டம்மிப் பதவி குடுபட்டிருக்கு. அதுக்காக அவையள் எல்லாருமே குற்றவாளியள் எண்டில்லை. ஆனால் அவை குற்றம் செய்திருக்கினம் எண்டு கன இடங்களில இருந்து முறைப்பாடுகள் போயிருக்கு. அந்த முறைப்பாடுகளின்ர அடிப்படையிலதான் உந்த ஏழுபேரையும் பதவி எண்ட பல்லைப் பிடுங்கிப் போட்டு, வேற இடங்களில டம்மிப் பதவியை ஆளுநர் குடுத்திருக்கிறார். இந்த அதிகாரிமார் பதவி இருகேக்க கடும் ஆட்டமாம். சிலரிட்ட காசை வாங்கிக் கொண்டு, செஞ்சோற்றுக்கடனா சனத்துக்கு எதிரான கன வேலையளச் செய்திருக்கினம். உப்பிடி பதவி பிடுங்குப்பட்ட எல்லாரிலையுமே லஞ்சம் வாங்கின குற்றச்சாட்டு ஆதாரங்களோட குடுபட்டிருக்கு. இனி அந்த ஆதாரங்கள் உண்மையோ இல்லையோ எண்டு உறுதிப்படுத்தினால் அவை வேலையைவிட்டே தூக்குப்படலாம்.**

**இன்னும் சிலரில , அதுவும் ஒரு திணைக்களத்தின்ர உச்சப் பொறுப்பில இருந்தவரில பொம்பிளைச் சேட்டைப் பிரச்சினை இருந்ததாம். அவரின்ர ரூமுக்க போறதுக்கே அங்க வேலை செய்யிற பொம்பிளையளுக்கு நடுக்கமாம். அப்பிடி தனக்கு கீழ வேலை செய்யிற எல்லாப் பொம்பிளையளோடையும் சேட்டை விடுறதும், கதைக்கக்கூடாததுகளைக் கதைக்கிறதும் எண்டு ஆள் ஆட்டம் போட்டிருக்கிறார். மேலதிகாரியை எதிர்த்து ஒண்டும் செய்யேலாது எண்டு பாதிக்கப்பட்டவையும் பேசாமல் இருந்திருக்கினம். ஆனால் இனியும் பேசாமல் இருந்தால் நிலைமை மோசமாப்போடும் எண்டதாலதான், கடைசியா முறைப்பாடுகள் செய்தவையாம். இப்ப அந்த முறைப்பாட்டுக்கு பலன் கிடைச்சதை. அந்த திணைக்கள ஒப்பீஸில வேலை செய்தவை தீபாவளி மாதிரி கொண்டாடி இருக்கினம். இப்பிடிச் சிலருக்கு வாலை ஒட்ட நறுக்கினால்தான், இதைமாதிரி ஆட்டம் போடுற மற்றவையும் கொஞ்சம் அடங்குவினம் கண்டியளோ.**

padsi@uthayan.com - பட்சி



# இன்றைய
(ராசிபலன்)

**மேடம்**: பல வகைகளிலும் அனுகூலமான நாள். சகோதரவகையில் எதிர்பாராத ஆதாயம் கிடைக்கும். நண்பர்களால் காரியங்களில் அனுகூலம் உண்டாகும். உறவினர்கள்வகையில் குடும்பத்தில் மகிழ்ச்சியுடன் செலவுகளும் ஏற்படும்.

**இடபம்**: தந்தைவழியில் தேவையற்ற செலவுகள் ஏற்படக்கூடும். சிலருக்கு வயிறு தொடர்பான பிரச்சினைகள் ஏற்படக்கூடும் என்பதால், உணவு விஷ யத்தில் கவனமாக இருக்கவும். உறவினர்க ளால் குடும்பத்தில் சில சங்கடங்கள் ஏற்படக்கூடும். பொறுமையைக் கடைப்பிடிப்பது அவசியம்.

**மிதுனம்**: மகாவிஷ்ணுவை வழிபடுவதன் மூலம் சிரமங்கள் குறையும். திருவாதிரை நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கு எதிர்பாராத செலவுகளால் கடன்வாங்கநேரிடும். புனர் பூசம் நட்சத்திரத்தில்பிறந்தவர்களுக்குஉறவினர்களால் செலவுகள் ஏற்படும்.

**கடகம்**: புதிய முயற்சிகளில் ஈடுபட உகந்த நாள். வாழ்க்கைத்துணைவழியில் செலவுகள் ஏற்படும். இளைய சகோதரவகையில் ஆதாயம் உண்டாகும். பிள்ளைகளால் வீட்டில் உற்சாக மான சூழ்நிலை ஏற்படும். மனதில் தன்னம்பிக் கையுடன் செயற்படுவீர்கள்.

**சிம்மம்**: தொடங்கும் காரியங்கள் சாதகமாக முடியும். குடும்பம் தொடர்பான முக்கிய முடிவுகள் எதுதையும் இன்றைக்கு எடுக்கவேண்டாம். நண்பர்க ளின் சந்திப்பு மகிழ்ச்சி தருவதாக இருக்கும். மற்றவர்களுடன் வீண்மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால் பேசும்போது பொறுமை அவசியம்.

**கன்னி**: வீட்டில் கலகலப்பான சூழ்நிலை காணப்படும். புதிய முயற்சிகள் சாதகமாகமுடியும். செலவுகள் அதிகரித்தாலும் சமாளித்துவிடுவீர்கள். வாழ்க்கைத்துணை உங்கள் முயற்சிக்குப் பக்கபலமாக இருப்பார். சிலருக்குப் பிள்ளைகள் மூலம் பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

**துலாம்**: உற்சாகமாகச் செயற்படுவீர்கள். குடும்பத்தில் உள்ளவர்களின் தேவைகளை நிறைவேற்ற செலவுசெய்யநேரிடும். வாழ்க்கைத் துணை உங்கள் பணிகளில் பங்கெடுத்துக் கொள் வது ஆறுதலாக இருக்கும். சகோதர வகையில் சில சங்கடங்கள் ஏற்பட்டு நீங்கும்.

**விருச்சிகம்**: புதிய முயற்சிகளுக்கு மிகவும் அனுகூலமான நாள். குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக்கொள்வர். வாழ்க்கைத் துணைவழி உறவுகளால் எதிர்பாராத ஆதாயம் ஏற்படும். சிலருக்கு எதிர்பாராத செலவுகளுக்கு வாய்ப்பு உண்டு.

**தனுசு**: அவசர முடிவுகளைத் தவிர்க்கவும். பிள்ளைகளின் விருப்பத்தைப் பூர்த்தி செய்வீர்கள். சிலருக்கு திடீர் பணவரவுக் கும் வாய்ப்பு உண்டு. பிற்பகலுக்கு மேல் கணவன் மனைவிக்கிடையே அந்நியோன் யம் அதிகரிக்கும்.

**மகரம்**: காரியங்களில் அனுகூலம் உண்டாகும் நாள். பிள்ளைகளால் ஏற்பட்ட பிரச்சினைகள் நீங்கும். செலவுகளைச் சமாளிக்கத் தேவை யான பணம் இருப்பதால் உற்சாகமாகவே இருப்பீர்கள். வாழ்க்கைத்துணையுடன் ஏற்பட்ட கருத்துவேறுபாடு நீங்கும்.

**கும்பம்**: அன்றாடப் பணிகளிலும் கூடுதல் கவனம்தேவை. தாய்வழி உறவுகளுக்காக செலவுசெய்யவேண்டிஇருக்கும் கணவன் மனைவிக்கிடையே வீண் விவாதங்கள் ஏற்படக்கூடும் என்பதால், பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது.

**மீனம்**: குடும்பத்தில் மற்றவர்களுடன் அனு சரித்துச்செல்லவும். கணவன் மனைவிக்கிடையே சிறு சிறு பிரச்சினை ஏற்படக்கூடும் என்பதால் பொறுமை அவசியம். தாயின் உடல் ஆரோக்கி யத்தில் கவனம்செலுத்தவும். வியாபாரத்தில் பொறுமை மிகவும் அவசியம்.



# டெல்லியை வீழ்த்தி குஜராத் அபார வெற்றி

**ஐ.பி.எல். தொடரின் 60ஆவது லீக் ஆட்டத்தில் 10 விக்கெட் வித்தியாசத்தில் டெல்லியை வீழ்த்தியது குஜராத். புதுடில்லியில் உள்ள அருண் ஜெட்லி மைதானத்தில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் நாணயச்சுழற்சியில் வெற்றிவெற்ற குஜராத் அணி களத்தடுப்பைத் தெரிவு செய்தது.**

முதலில் துடுப்பெடுத்தாடிய டெல்லி கப்பிட்டல் அணி நிர்ண யிக்கப்பட்ட 20 பந்துப்பரிமாற்றங் களில் 3 விக்கெட்டுக்களை இழந்து 199 ஓட்டங்களைப் பெற் றது. அதிரடியாக ஆடிய கே.எல். ராகுல், ஆட்டமிழக்காமல் 112 ஓட் டங்களைப் பெற்றார். அபிஷேக் பொரல் 30 ஓட்டங்களையும், அக்சர் பட்டேல் 25 ஓட்டங்களை யும் பெற்றனர்.

200 ஓட்டங்களை வெற்றி இலக் காகக் கொண்டு குஜராத் அணி களமிறங்கியது. ஆரம்ப வீரர்க ளான சாய் சுதர்சன் மற்றும் சுப் மன் கில் ஆகியோர் அதிரடியாகத் துடுப்பெடுத்தாடினர். குஜராத் அணி 19 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் விக்கெட் இழப்பின்றி 205 ஓட்டங்கள் எடுத்து அபார வெற்றியீட்டியது. சாய் சுதர்சன் 108 ஓட்டங்களுடனும், சும்மன் கில் 93 ஓட்டங்களுடனும் ஆட்டமி ழக்காது களத்தில் இருந்தனர்.

இந்த வெற்றியின் மூலம் குஜராத் அணி புள்ளிப்பட்டியலில் முதலிடத் துக்கு முன்னேறியுள்ளது. (எ-இ)



# ராஜஸ்தானை 10 ஓட்டங்களால் வீழ்த்தியது பஞ்சாப் கிங்ஸ்

**ஐ.பி.எல். தொடரின் 59ஆவது லீக் ஆட்டத்தில் ராஜஸ் தான் ரோயல்ஸ் அணியை 10 ஓட்டங்களால் வீழ்த் தியது பஞ்சாப் கிங்ஸ் அணி.**

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பெற்ற பஞ்சாப் கிங்ஸ் அணி துடுப்பெடுத்தாடத் தீர்மா னித்தது.

துடுப்பெடுத்தாடிய பஞ்சாப் அணி 20 பந்துப்பரிமாற்றங்கள் நிறை வில் 5 விக்கெட்டுக்களை இழந்து 219 ஓட்டங்களைப் பெற்றது. நெஹால் வதேரா 70 ஓட்டங்களை யும், ஷஷங்ச் சிங் 59 ஓட்டங்களை யும், ஸ்ரேயஸ் ஐயர் 30 ஓட்டங்க ளையும் அந்த அணி சார்பாக அதிகபட்சமாகப் பெற்றனர்.

220 ஓட்டங்களை வெற்றி இலக் காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி 20 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 7 விக்கெட்டுக்களை இழந்து 209 ஓட்டங்களைப் பெற்றது. அந்த அணி சார்பாக துருவ் ஜுரல் 53 ஓட்டங்களையும், ஜெய்ஸ்வால் 50 ஓட்டங்களையும் வபினஸ் சூரிய வன்ஸி 40 ஓட்டங்களையும் அதி கபட்சமாகப் பெற்றனர். (எ-இ)

# கௌரவிப்பும் நூல் வெளியீடும்



மாதகலைச் சேர்ந்த விசுவநாதர் சிற்றம்பலத்தின் சமூகசேவைகளைப் பாராட்டி அவரின் வாழ் நாள் சாதனைகளை வாழ்த்தும் கௌரவிப்பு விழாவும் நூல் வெளியீடும் மாதகல் இளைஞர் சங்கத்தின் கலையரங்கத்தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றது.

இதன்போது 'கந்தன் அலங்காரம்' மற்றும் 'மாத கலின் விடிவெள்ளி' ஆகிய நூல்கள் வெளியிட் டுவைக்கப்பட்டன. நிகழ்வில் சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலர் திருமதி.சுபா ஜினி மதியழகன், சமயத்தலைவர்கள், புலம்பெயர் அமைப்புகளின் பிரதிநிதிகள், கிராமமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ச-41-66)

# போட்டிப்பரீட்சை

சாவகச்சேரி, மே 19

முகாமைத்துவ உதவியாளர் பதவிக்கு நியமனம் செய்வதற் கான போட்டிப்பரீட்சை நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற் றது. இப் பரீட்சைக்கான சகல ஏற்பாடுகளையும் பரீட்சைத் திணைக்களம் மேற்கொண்டுள் ளது. (ச-41-131)

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உண்மை - நேர்மை - அஞ்சாமை




# உப்பால் உருகும் அரசு

கோத்தாபயவின் ஆட்சிக்கு எப்படி இயற்கை உர விவகாரம் உலைவைத்ததோ அதேபோன்று இந்த உப்பு விவகாரம் அநுர அரசாங்கத்துக்கு ஓர் ஆட்டம் காண்பிக்கப்போகின்றதுபோலவே காரியங்கள் நடந்துவருகின்றன. அநுர அரசாங்கம் ஆட்சிக்கு வந்தபோது வெறும் 70 ரூபாவாக இருந்த ஒரு பைக்கற் கட்டி உப்பின் விலை இப்போது முந்நூறு ரூபாவைத் தாண்டிவிட்டது. அப்படி நான்கு மடங்குக்கும் அதிகமாக விலை எகிறியும்கூட, பல இடங்களில் கட்டி உப்பை தேடி அலைந்தும் கிடைப்பதில்லை என பொது மக்கள் குற்றசாட்டுகின்றனர். உப்புத்தட்டுப் பாட்டை நிவர்த்திக்க அரசாங்கம் ஒரு தொகுதி உப்பை இறக்குமதிசெய்தும்கூட இலங்கையில் அரிதான பொருள்களில் ஒன்றாக உப்பு மாறிவிட்டது. உப்பில்லா உணவு எப்படித் தூக்கி வீசப்படுமோ அப்படி உப்பில்லாத ஒப்பிலாப் பிரச்சினையால் இந்த அரசாங்கமும் தூக்கியெறியப்படும் அபாயமுண்டு. இதனால்தான் இப்போது எதிர்க்கட்சிகளும் உப்பு விவகாரத்தை சிக்கெனப் பிடித்து அதைப்பற்றிய கருத்துருவாக்கங்களை மக்களிடம் உண்டுபண்ணி வருகின்றன.

நான்கு பக்கமும் கடலால் சூழப்பட்டதும், வெப்ப வலயத்துக்குள் உள்ளடங்குவதுமான இலங்கையில் உப்புக்குத் தட்டுப்பாடு என்றால் அதைவிடப் பெரிய வேடிக்கை வேறெதுவும் இருக்கமுடியாது. கோத்தாபயவின் ஆட்சிக்காலத்தில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டபோது எரிபொருள் உள்ளிட்ட பல அத்தியாவசியப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டது. ஆனால் அந்தப் பொருள்களெல்லாமே இறக்குமதி செய்யப்படுபவை, உள்நாட்டில் உற்பத்திசெய்யப்பட முடியாதவை. ஆனால் அநுர அரசாங்கத்தில் விலை உயர்வுக்கும், தட்டுப்பாட்டுக்கும் உட்படும் பொருள்கள்எல்லாமே இலங்கையில் உற்பத்தி செய்யப்படுபவை. அரிசி, தேங்காய்,முட்டை, புளி என்று நீள்கின்ற இந்தப் பட்டியலில் உப்பும் உள்ளடங்கிவிட்டது. உள்நாட்டில் உற்பத்தி செய்யக்கூடிய பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்படுகின்றதென்றால், அதற்கு ஒரேயொரு காரணமே இருக்கமுடியும். சரியான, திட்டமிட்டலுடன் கூடிய நிர்வாகத்திறன் இல்லாமையே அந்தக் காரணம். ஆனால் அதை இந்த அரசாங்கம் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை. எப்படி தேங்காய்த் தட்டுப்பாட்டுக்கும், அரிசி விலையுயர்வுக்கும் விலங்குகள் மீதுபழிபோட்ட தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் , உப்புப் பிரச்சினைக்கும் இயற்கையைக் காரணம் காட்டி தப்பமுயல்கிறது.

'இந்தவருடம் முழுதும் தொடர்ச்சியாக மழை பெய்வதால் எங்களால் உப்பை உற்பத்தி செய்யமுடியவில்லை' என்று அதிகாரிகளும், அரசாங்கத்தினரும் சொல்கின்றனர். ஆனால் இதைவிட மழைநாள்கள் அதிகமாக இருந்த காலத்தில்கூட இப்படி உப்புத்தட்டுப்பாடு வந்ததில்லையே. அப்போதும் உப்பு உற்பத்தி நடந்துகொண்டுதானே இருந்தது? எனவே உப்புத் தட்டுப்பாட்டுக்கான உண்மையான காரணத்தை இந்த அரசாங்கம் கண்டுபிடித்து அதனைத் தீர்க்காவிட்டால் உப்புப்பிரச்சினை விஸ்வரூபமெடுக்கும் சாத்தியங்களே அதிகம். ஆனையிறவு உப்பளத்தை வெகுவிமர்சையாக மீளத்திறந்தார்கள். இத்தோடு உப்புப்பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி என்று சொன்னார்கள். ஆனால் இப்போது அந்த ஆனையிறவு உப்பளமே பெரும் பிரச்சினையாகி, பணியாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள். இன்னொரு புறத்தில் 'ஆனையிறவு உப்பள இயந்திரம் பழுது. அதனால் வேறு உப்பளங்களில் இருந்தே உப்பை எடுத்து பொதி செய்கிறோம்' என்கிறார் ஆளும் கட்சி எம்.பி. ஒருவர். இப்படி கையில் இருக்கும் வெண்ணெயைக்கூட சரிவரப் பயன்படுத்தத் தெரியாமல், ஆளுக்கொரு காரணம் சொல்லிக் கொண்டிருந்தால் நாடு விரைவில் இன்னொரு அரகலயவைச் சந்திக்கும் என்பது மட்டும் திண்ணம்.


செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com


## நாளொரு நல்வார்த்தை

நாம் நமது நேரத்தை செலவிடும் விதம்
நாம் யார் என்பதை வரையறுக்கிறது.

– ஜோனதன் எஸ்ட்ரின் –




# நீதி நிறைவேற்றப்படும்வரையில் போராடும் வலிமை பெறுவோம்

கனேடியப் பேரவை தெரிவிப்பு

CANADIAN TAMIL COLLECTIVE
கனேடியத் தமிழர் கூட்டு

கொழும்பு,மே 19

**நாங்கள் மறக்கமாட்டோம். நாங்கள் மௌனமாக இருக்கமாட்டோம்.நீதி நிறைவேறும் நாள் வரைக்கும் நாங்கள் நின்றுவிடமாட்டோம் என கனேடியத் தமிழர் பேரவை தெரிவித்துள்ளது. முள்ளிவாய்க்கால் தமிழ் இனப் படுகொலையின் 16 வருடத்தைக் குறிக்கும் அறிக்கையில் கனேடியத் தமிழர் பேரவை இதனைத் தெரிவித்துள்ளது.**

அதில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

இன்று 2009ஆம் ஆண்டு மே 18 அன்று இலங்கையில் முடிவுற்ற போரின் 16ஆவது ஆண்டு நினைவுநாளை ஆழ்ந்த வலியுடனும் உறுதியுடனும் கனேடியத் தமிழர் பேரவை நினைவுகூருகிறது. மே 18 தமிழ் மக்களின் நினைவுகளில் சொல்லொணாத் துயரம் நிறைந்த நாளாகவே என்றும் நிறைந்திருக்கும். துக்கம் நிறைந்த நாளும் நினைவுகளின் நாளும் நியாயம் நிலைநிறுத்தப்படும் வரைக்கும் தொடர்ச்சியாகப் போராடவேண்டிய காரணங்களைப் பெருத்த வலியோடு நினைவுகூரும் நாளுமாக உள்ளது.

முள்ளிவாய்க்காலில் நடைபெற்ற படுகொலைகள் என்பது இலங்கைத் தமிழ் மக்களின் வேதனையின் தொடக்கமல்ல. அது தமிழ் மக்களின் நீண்ட அவல வரலாற்றின் அதிகொடூர உச்சகட்டமாகும். இந்த நினைவுகள் நம்மைப் பலமாகத் தாக்குவதோடு நியாயம் கிடைக்கும் வரை விடாமுயற்சியுடன் போராடவேண்டிய உறுதியையும் நமக்குத் தருகின்றன - என்றுள்ளது. (ச-இ)

# கொட்டாஞ்சேனை துப்பாக்கிச்சூடு இருவர் கைது

கொழும்பு,மே 19

கொட்டாஞ்சேனை பகுதியில் துப்பாக்கிச்சூடு நடத்திய நபரும், மோட்டார் சைக்கிள் ஓட்டுநரும் கைது செய்யப்பட்டுள்ளரென கொட்டாஞ்சேனை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட இரண்டு சந்தேகநபர்களும் கொட்டாஞ்சேனையைச் சேர்ந்த 1718 வயதுடையவர்கள் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச-இ)



# உப்பின் விலை ரூ.100 குறையும்

கொழும்பு,மே 19

உப்புப்பற்றாக்குறையைப் போக்க, இன்று திங்கட்கிழமை 2,800 மெற்றிக் தொன் உப்பு இறக்குமதிசெய்யப்படவுள்ளது. அவ்வாறு உப்பு வந்தவுடன், தற்போது 400 ரூபாவுக்கு விற்கப்படும் உப்பின் விலையை 100 ரூபாவால் குறைக்கலாம் என்று வர்த்தகம், வணிகம் மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இறக்குமதிசெய்யப்பட்ட 30,000 மெற்றிக்தொன் உப்பு வருவதில் ஏற்பட்ட தாமதத்தாலேயே சந்தையில் பற்றாக்குறை மற்றும் விலை உயர்வு ஏற்பட்டது என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)



# சுமத்ரா தீவில் நிலநடுக்கம்

இந்தோனேசியாவின் சுமத்ரா தீவில் நேற்று அதிகாலை 2.50 மணியளவில் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. வடக்கு சுமத்ராவில் 58 கிலோமீற்றர் ஆழத்தில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கம் ரிச்டர் அளவில் 4.6 ஆகப் பதிவாகியுள்ளது. (ச-இ)

# ஜனாதிபதி நிதியச் செயற்பாடு பிரதேச மட்டத்துக்கு விரிவு!

ஜனாதிபதி நிதியத்தின் செயற்பாடுகளைப் பிரதேச செயலகங்கள் ஊடாக நாடு தழுவிய ரீதியில் விஸ்தரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதன்பிரகாரம் இனி வரும் காலங்களில் ஜனாதிபதி நிதியத்தின் கொடுப்பனவுகளை எதிர்பார்க்கும் நோயாளிகள், பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் அதற்கான அதிகாரிகளைச் சந்தித்து தங்கள் விண்ணப்பங்களை சமர்ப்பிக்கலாம். இது தொடர்பில் பிரதேச செயலக அதிகாரிகளுக்கு ஜனாதிபதி அலுவலகத்தின் சார்பில் விசேட பயிற்சிகளும் வழங்கப்படவுள்ளன. (ச-இ)

நாளை

செவ்வாய்க்கிழமை- வைகாசி 06

20.05.2025

சுபநேரம் : 11.52- 01.52

ராகுகாலம் : 07.22 - 08.52

# கண்ணீர் மழையில் முள்ளிவாய்க்கால் முற்றம்
















சிங்கள கடும்போக்குவாதிகளின் எதிர்ப்புக்கு மத்தியில்

## முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வெள்ளவத்தையில் உணர்வுபூர்வம்

கொழும்பு, மே 19

சில சிங்கள கடும்போக்குவாதிகளின் கடும் எதிர்ப்புக்கு மத்தியிலும், முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு கொழும்பு, வெள்ளவத்தை கடற்கரைப் பகுதியிலும் உணர்வுபூர்வமாக நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

மே 18 எனும் அமைப்பின் ஏற்பாட்டில் நடைபெற்ற நினைவேந்தல் நிகழ்வில் அரசியல் செயற்பாட்டாளர்கள், சமூக செயற்பாட்டாளர்கள், சர்வ மதத்தினர் எனப் பலரும் பங்கேற்று அஞ்சலி செலுத்தினர்.

இதன்போது நினைவேந்தல் நிகழ்வை குழப்பும் நோக்கில் அப்பகுதிக்கு சிலர் வந்திருந்தனர். பயங்கரவாதிகளை நினைவுகூருவதற்கு இடமளிக்கவேண்டாம் எனப் பொலிஸாருடன் அவர்கள் தர்க்கத்தில் ஈடுபட்டனர். இதனால் அப்பகுதியில் பெரும் பதற்றம் ஏற்பட்டதுடன் பொலிஸாரின் தலையீட்டால் நிலைமை சீர் செய்யப்பட்டது.

(ச-44)







# உயிர்நீத்த உறவுகளுக்காக நந்திக்கடலில் அஞ்சலி!

முள்ளிவாய்க்காலில் உயிர்நீத்த உறவுகளுக்கு வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், நந்திக்கடலில் மலர்தூவி நேற்று அஞ்சலி செலுத்தியுள்ளார்.

அதனைத் தொடர்ந்து வற்றாப்பளை கண்ணகியம்மன் ஆலயத்தில் உயிரிழந்தவர்களின் ஆத்மசாந்திவேண்டி பிரார்த்தனையும் மேற்கொள்ளப்பட்டது. (ச-26,246)



இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஏற்பாட்டில் முள்ளிவாய்க்கால் நினை வேந்தலும், முள்ளி வாய்க்கால் கஞ்சி பரிமாறலும், வடமராட்சி கிழக்கு கட்டைக்காட்டில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை முன்னெடுக்கப்பட்டது. இதன் போது முள்ளி வாய்க்கால் கஞ்சியும் பரிமாறப்பட்டது. (ச-41-100)






தமிழினப் படுகொலையின் 16ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு வடக்கு, கிழக்குத் தமிழர் பிரதேசங்களில் நினைவுகூரப்பட்டு வரும்நிலையில் மன்னாரிலும் நினைவுகூரப்பட்டது.

அந்தவகையில் தமிழ்த்தேசிய வாழ்வுரிமை இயக்கம் ஏற்பாடுசெய்த நினைவேந்தல் நிகழ்வு, இயக்கத்தின் தலைவர் வி.எஸ்.சிவகரன் தலைமையில் மன்னார் பஜார் பகுதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. (ச-41-56)

போரில் உயிர்நீத்தோரை நினைவுகூரும் முள்ளிவாய்க்கால் நினைவுநாளான நேற்று வவுனியாவிலும் அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்றன.

வவுனியா மாவட்ட அந்தணர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் வவுனியா குருமண்காடு பிள்ளையார் ஆலயத்தில் முள்ளிவாய்க்கால் அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது. (ச-110)





# கொலையுண்ட சிறார்களுக்கு வலிகாமம் கிழக்கில் அஞ்சலி

யாழ்ப்பாணம், மே 19

இறுதிப்போர் உள்ளிட்ட அரசபடை நடவடிக்கைகளில் படுகொலைசெய்யப்பட்ட சிறார்களைநினைவுகூர்ந்து சிறுவர்களின் பங்கேற்புடன், வலிகாமம் கிழக்கு வாதரவத்தை, வீரவாணி ஞானவாணி சனசமூக நிலையத்தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை அஞ்சலி நிகழ்வுகள் உணர்வுபூர்வமாக இடம்பெற்றன.

சமூக செயற்பாட்டாளர் சிவராசா ரூபன் தலைமையில் அஞ்சலிச் சுடரினை, போரில் மகனை இழந்த தந்தை எஸ். சுந்தரவேல் ஏற்றினார். போரில் சிறுவர்களுக்கு எதிராக அரசு மேற்கொண்ட தாக்குதல்களின் கோரத்தினையும் அதுதொடர்பில் பொறுப்புக்கூறப்படாமை மற்றும் மறுக்கப்பட்ட நீதி தொடர்பில் வலிகாமம் கிழக்கு பிரதேசசபையின் முன்னாள் தவிசாளர் தியாகராஜா நிரோஸ் அஞ்சலியுரையாற்றினார், இராணுவ நடவடிக்கைகளில் மனிதாபிமானமற்ற முறையில் படுகொலைசெய்யப்பட்ட ஆயிரக்கணக்கான சிறுவர்களை நினைவுகூர்ந்து 16 தீபங்கள் ஏற்றப்பட்டு அஞ்சலிப்பிரார்த்தனை இடம்பெற்றது. போரின் பின்பாக கடந்த 16 ஆண்டுகளாக நாம் நீதி கிட்டாதவர்களாக, அடக்குமுறைக்குள் ஏங்குகின்றோம் என்பதை மையப்படுத்தியதாகவே 16 தீபங்கள் ஏற்றப்பட்டன.

போருக்குப் பின்னர் முள்ளிவாய்க்கால் இறுதிப்போரில் வலிந்து காணாமலாக்கப்பட்டவரின் தாயாரான பா.யோகராணி முள்ளிவாய்க்கால் கஞ்சியை வழங்கினார். தொடர்ந்து போரின் வலிகளையும் அவ்வலிகளுக்கும் கொடூர அநீதிகளுக்கும் உள்நாட்டில் நீதி வழங்கப்படவில்லை என்பதை வெளிப்படுத்தி "சர்வதேச நீதி ஒன்றே உள்நாட்டில் பாதிக்கப்பட்டு ஒடுக்குமுறைகளுக்கு உள்ளாகும் எமக்கான பரிகாரம்" என்ற தொனிப்பொருளில் நிகழ்வுகளும் இடம்பெற்றன. (ச-26-33)



# முள்ளிவாய்க்கால் கஞ்சி

யாழ்ப்பாணம், மே 19

தமிழ் மக்கள் கூட்டணியினரால் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வு மல்லாகம் பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை முன்னெடுக்கப்பட்டது. முள்ளிவாய்க்கால் தமிழின அழிப்பின் 16 ஆவது ஆண்டு நினைவையொட்டி ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்நிகழ்வில் தமிழ் மக்கள் கூட்டணியின் உப செயலாளர் சட்டத்தரணி மணிவண்ணன், முன்னாள் மாநகரசபை உறுப்பினர் பார்த்தீபன், தமிழ மக்கள் கூட்டணியின் வலி. வடக்குத் தொகுதி உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர். (ச-33-27-66)

19.05.2025 திங்கட்கிழமை

# மழையால் கரைந்த 15,000 தொன் உப்பு

திடீரெனப் பெய்த கடும் மழை காரணமாக சுமார் 15 ஆயிரம் மெற்றிக்தொன்னுக்கும் அதிகமான உப்பு அறுவடை அடித்துச் செல்லப்பட்டுள்ளதாக புத்தளம் உப்பு விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

இலங்கையின் மொத்த உப்பு உற்பத்தியில் புத்தளம் கிட்டத்தட்ட 60 சதவீதத்தை பங்களிக்கிறது. மேலும், நல்ல சூரியஒளி உள்ள காலங்களில் ஆயிரம் மெற்றிக் தொன்களுக்கும் அதிகமான உப்பு அறுவடை செய்யப்பட்டுள்ளது. உப்பு உற்பத்தியைத் தடுத்துவந்த மழைக்கால நிலைமைகள் உப்பு விவசாயிகளுக்கு கடுமையான பொருளாதாரச் சிக்கல்களையும் ஏற்படுத்தின. இந்த நிலையில், புத்தளத்தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை பெய்த மழையால், உப்பு அறுவடை மீண்டும் தோல்வியடைந்துள்ளதாக உப்பு உற்பத்தியாளர்கள் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

# கம்போடியாத் தூதுவர் பிரதமருடன் சந்திப்பு

கொழும்பு, மே 19

இலங்கைக்கான கம்போடியாத் தூதுவர் ராத் மானி, பிரதமர் அலுவலகத்தில் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரியவை கடந்த வெள்ளிக்கிழமை சந்தித்தார்.

இரு நாடுகளுக்கும் இடையேயான நேரடி விமான இணைப்பை ஏற்படுத்துவதற்கான இருதரப்பு ஒப்பந்தத்தை தூதுவர் ராத் முன்மொழிந்ததுடன் வர்த்தகம், சுற்றுலா மற்றும் மக்களிடையேயான உறவுகளை வலுப்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகளையும் விளக்கினார்.

கம்போடியாச் சுற்றுலாப் பயணிகளுக்குவிருப்பமான இடமாக இலங்கையை ஊக்குவிப்பதில் அரசாங்கம் கவனம்செலுத்துவதாக பிரதமர் இதன்போது தெரிவித்தார். (ச-இ)

## பெண் பணியாளர்கள் தேவை

1. ஆய்வுகூட உதவியாளர்
2. மாணவர் விடுதி மேற்பார்வையாளர்

**ஆய்வுகூட உதவியாளர்**

தகைமை : க.பொ.த (சா/த) சித்தி

வயது : 40 வயதுக்குட்பட்டோர் விரும்பத்தக்கது.

**மாணவர் விடுதி மேற்பார்வையாளர் (Matron)**

தகைமை : க.பொ.த (சா/த) அல்லது அதற்கு மேற்பட்டது

வயது : 30 - 60 வயதுக்குட்பட்டோர் விரும்பத்தக்கது.

(விடுதியில் தங்கியிருந்து வேலை பார்ப்பவர் விரும்பத்தக்கது)

**விண்ணப்ப முடிவுத்திகதி : 31.05.2025**

**அனுப்ப வேண்டிய முகவரி : அதிபர்,**
**சுண்டிக்குளி மகளிர் கல்லூரி,**
**6, கொழும்புத்துறை வீதி,**
**யாழ்ப்பாணம்.**

## மரண அறிவித்தல்

தோற்றம் 15 . 07 . 1998



மறைவு 17 . 05 . 2025

**செல்வி சயந்தினி சற்குணராசா**

யாழ் மானிப்பாய் கிழக்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சயந்தினி சற்குணராசா அவர்கள் (17.05.2025) சனிக்கிழமை மானிப்பாயில் காலமானார்.

அன்னார் சற்குணராசா - அமிர்தா தம்பதிகளின் பாசமிகு மகளும் தரிசன், தினோபன், சிந்துஜா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.05.2025) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு
தரிசன் - 076 635 2595

தகவல்:
குடும்பத்தினர்

CS (58301) E-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 02 . 05 . 1944



மறைவு 16 . 05 . 2025

**திருமதி பாலசுப்பிரமணியம் உமாதேவி**

துர்க்காபுரம், மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும், ஆனைக்கோட்டை வீதி கொக்குவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பாலசுப்பிரமணியம் உமாதேவி அவர்கள் 16.05.2025 வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தில்லைநாயகம் - அன்னபூரணியம்மா அவர்களின் இளையபுதல்வியும், காலஞ்சென்ற காசிப்பிள்ளை - பாலசுப்பிரமணியம் (வீசம்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற காசிப்பிள்ளை - இரத்தினம்மா தம்பதியினரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற குகதாஸ், மற்றும் நவமணிதேவி (கனடா), மாவிந்திரிதேவி (கனடா), பற்குணதாஸ் (பிரான்ஸ்), காலஞ்சென்ற கணேசதாஸ், சிவதாஸ் (லண்டன்), அருள்தாஸ் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் இராஜேஸ்வரி, காலஞ்சென்றவர்களான கனகசூரியம், சிவனேசன், மற்றும் சுந்தரவல்லி, ஜெயமணி, வருணராணி, கமலாதேவி, சிவபாதசுந்தரம், காலஞ்சென்றவர்களான மகேந்திரராஜா, மகாலட்சுமி மற்றும் மங்கையற்கரசி, காலஞ்சென்றவர்களான கமலாம்பிகை, யோகநாதன் மற்றும் சிவநாதன், இராஜேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனியும் சுதர்சன் (பொறியியலாளர், லண்டன்), சஞ்சயன் (பொறியியலாளர், கனடா), சுதர்ஷினி (ஆசிரியர், யாழ்ப்பாணம் இந்து ஆரம்ப பாடசாலை), சஞ்சிகா (மருந்தியியலாளர், வீசம் மருந்தகம்) ஆகியோரின் அன்புத்தாயாரும், ஸ்ரீதாட்சாயினி, சர்மினி, சோமேஸ்வரன் (ஆசிரியர், முத்துத்தம்பி மகாவித்தியாலயம்), தனஞ்செயன் (ஆசிரியர், நயினாதீவு ஸ்ரீகனேசா கனிஷ்ட மகாவித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு மாமியும் பிரவீனா (வைத்தியர்), சயமி (சட்டத்தரணி), ஹரிஸ், பிரவீன், ராகவி, நிலா, தரிஷ், கபிஷன், பார்கவி, (கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவர்கள்) ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.05.2025) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காலை 09.00 மணியளவில் கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**ஆனைக்கோட்டை வீதி ,**
**கொக்குவில் மேற்கு**

தகவல்:
குடும்பத்தினர்
077 394 2701

(CS 58284) E-1

## மரண அறிவித்தல்

மலர்வு 20 . 03 . 1957



உதிர்வு 18 . 05 . 2025

**அருந்ததிதேவி திருநாவுக்கரசு**

கொழும்பைப் பிறப்பிடமாகவும், இருபாலை, களுபோவில தெஹிவளையை வசிப்பிடமாகவும் கொண்ட அருந்ததிதேவி திருநாவுக்கரசு நேற்று (18.05.2025) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிதம்பரநாதன் - அன்னபகவதி தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வியும், காலஞ்சென்றவர்களான கந்தையா - தையல்நாயகி தம்பதியினரின் மருமகளும், கந்தையா திருநாவுக்கரசு அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற ரவீந்திரநாதன் மற்றும் கணநாதன், ஜெயதேவி ஆகியோரின் பாசத்திற்குரிய சகோதரியும், மகேஸ்வரி, சந்திரசேகரம், முத்துக்குமாரசாமி, திருவருட்செல்வன், சிவஜோதி ஆகியோரின் அன்பு மைத்துனியும், திருமகள், காயத்திரி, நிரந்தரி ஆகியோரின் பாசமிகு தாயாரும், வாகீசன், முகுந்தன், தயாபரன், சூரியலிங்கம், சுகந்தினி, மாதங்கி ஆகியோரின் நேசத்துக்குரிய மாமியும், சத்தியராணி, விக்கினேஷ்வரன் ஆகியோரின் நேசம்மிகு சிறியதாயும், ரிஷிகேசன், நிருத்தியா ஆகியோரின் பாசமிக்க பெரியம்மாவும் கேசன்யா, கோபிகா, கோசிகன், சுகன்யா, தனுக்ஷன், தரன்யா ஆகியோரின் அன்புப் பேத்தியுமாவார்.

அன்னாரின் தெஹிவளை இல்லத்தில் பூதவுடல் 18.05.2025 அன்று மாலை 06.00 மணியிலிருந்து பார்வைக்கு வைக்கப்பட்டு, 21.05.2025 புதன்கிழமை அன்று காலை 09.00 மணியளவில் இறுதிக்கிரியைகள் இடம்பெற்று முற்பகல் 10.30 மணியளவில் தகனத்திற்காக பொரளை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

தகவல்:
**குடும்பத்தினர்.**

# இலங்கையில் அட்டூழியம்; பொறுப்புக்கூறல் அவசியம்

## பிரிட்டன் பிரதமர் தெரிவிப்பு

**கொழும்பு, மே 19**

**இலங்கையில் போரில் கொல்லப்பட்டவர்கள்- பரந்துபட்ட மனித உரிமை மீறல்களை அனுபவித்தவர்கள். சமூகங்களாக ஒன்றிணைந்து முன்னோக்கிச் செல்வதற்கு கடந்தகால அட்டூழியங்களை ஏற்றுக்கொள்வதும், பொறுப்புக்கூறலும் மிக அவசியம் என்று பிரிட்டன் பிரதமர் கெய்ர் ஸ்டார்மெர் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கையில் மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகளுக்கு உள்ளான தனிநபர்களுக்கு எதிராகப் பிரிட்டன் சமீபத்தில் இலக்குவைக்கப்பட்ட தடைகளை விதித்துள்ளமை குறித்துத் திருப்தியடைகின்றேன். போரில் கொல்லப்பட்டவர்களை நினைவுகூருவதற்காக இலங்கையிலும் உலகம் எங்கிலுமுள்ள தமிழர்கள் ஒன்றுதிரண்டுள்ளனர்.

பாதிக்கப்பட்ட அனைத்துத் தமிழர்களையும், நினைவுகூருவதில் நான் உங்களுடன் இணைந்து கொள்கின்றேன். அந்த அநீதிகளின் கொடுமைகளின் பாதிப்புகள், நினைவுகளுடன் வாழும் உயிர்பிழைத்தவர்கள் அன்புக்குரியவர்களுடன் உடன்நிற்கின்றோம். நீதி மற்றும் அமைதியைத் தொடர்ந்து பின்பற்றவேண்டியதன் அவசியத்தை இந்தப் புனிதமான நாள் நினைவூட்டுகின்றது - என்றார். (ச-இ)



# ரயில் நிலைய அதிபர்கள் பணிப்புறக்கணிப்பு

கொழும்பு, மே 19

ரயில் நிலைய அதிபர்கள் சங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டுள்ள பணிப்புறக்கணிப்புப் போராட்டம் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டுவருவதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

பணியமர்த்தல் உள்ளிட்ட பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்குமாறு கோரி ரயில் நிலைய அதிபர்கள் சங்கத்தின் பணிப்புறக்கணிப்பு முன்னெடுக்கப்பட்டுவருகின்றது.

நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை நள்ளிரவு முதல் முன்னெடுக்கப்படும் இந்த பணிப்புறக்கணிப்புக் காரணமாக நீண்டதூர ரயில் சேவைகள் இடைநிறுத்தப்படுவதாக ரயில்வே கட்டுப்பாட்டு அறை தெரிவித்துள்ளது. (ச-இ)

# இந்தவருட நடுப்பகுதியில் பணவீக்கம் ஸ்திரநிலை!

கொழும்பு,மே 19

பணவீக்கமானது இந்த வருடம் நேர்மறையாக உயர்வடைந்து, நடுத்தரகாலத்தில் 5 சதவீதமாகப் பதிவாகும் என இலங்கை மத்திய வங்கி எதிர்வுகூறியுள்ளது.

தொடர்ச்சியாக இரு ஆண்டுகள் பொருளாதாரச்சுருக்கம் பதிவாகியிருந்த நிலையில், கடந்த ஆண்டு நாட்டின் பொருளாதாரம் 5 சதவீத வளர்ச்சியைப் பதிவுசெய்தது.

அத்தோடு 2023 ஆம் ஆண்டு 4.4 சதவீதமாகப் பதிவாகியிருந்த வேலைவாய்ப்பின்மை வீதம், 2024 ஆம் ஆண்டு 0.5 சதவீதமாக வீழ்ச்சியடைந்தது. பணவீக்கமானது இவ்வருடம் நேர்மறையாக உயர்வடைந்து, நடுத்தரகாலத்தில் எதிர்பார்க்கப்படும் 5 சதவீத மட்டத்தைப் பதிவுசெய்து, ஸ்திரமடையும் என்றும் எதிர்வுகூறப்பட்டுள்ளது. (ச-இ)



# கடையை உடைத்து நவாலியில் திருட்டு

யாழ்ப்பாணம், மே 19

நவாலியில் கடையை உடைத்துத் திருடிய குற்றச்சாட்டில் மானிப்பாய் பொலிஸாரால் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

நவாலிப் பகுதியில் அமைந்துள்ள கடை ஒன்று தேர்தலுக்கு முதல்நாள் இரவு உடைக்கப்பட்டு அங்கிருந்த சிசிரிவி கமரா மற்றும் ஆவணங்கள் திருடப்பட்டுள்ளதாக மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டது.

முறைப்பாட்டுக்கமைய மானிப்பாய் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு சந்தேகநபரொருவரைக் கைதுசெய்துள்ளனர். சந்தேகநபரை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளைப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ச-125)

# வேலைநிறுத்தம் நியாயமற்றது!

கொழும்பு, மே 19

தீர்வுகள் வழங்கப்பட்டிருந்தபோதிலும், ரயில் நிலைய அதிபர்கள் நியாயமற்றமுறையில் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர் என போக்குவரத்து அமைச்சு தெரிவித்துள்ளது.

பல கோரிக்கைகளை முன்னிறுத்தி, ரயில் நிலையப் பொறுப்பதிகாரிகள் கடந்த வெள்ளிக்கிழமை நள்ளிரவுமுதல் மேற்கொள்ளும் அடையாள வேலைநிறுத்தம் தொடர்பாக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ள போக்குவரத்து அமைச்சு இதனைத் தெரிவித்துள்ளது.

ஐந்து வருடங்களுக்கு ஒருமுறை பதவியுயர்வு வழங்குவதில் தாமதம் செய்தல் மற்றும் புதிய ஆட்சேர்ப்புச் செயன்முறையை செயற்படுத்தாமை ஆகிய இரண்டு கோரிக்கைகளை முன்னிறுத்தி, ரயில் நிலையப் பொறுப்பதிகாரிகள் இந்த வேலைநிறுத்தத்தை ஆரம்பித்துள்ளனர். இந்தக் கோரிக்கைகளுக்கு அமைச்சு மட்டத்தில் தீர்வுகள் வழங்கப்பட்டிருந்தும், அவை செயற்படுத்தப்படாமைக்கு திணைக்களத்தின் திறனற்ற தன்மையே காரணம். மக்களுக்கு அசௌகரியம் ஏற்படுத்தும் வகையில் உடனடி வேலைநிறுத்தம் மேற்கொள்வது, அரசாங்கத்தை அசௌகரியப்படுத்தவும், மக்களைப் பாதிக்கவும் முயல்வதாக உள்ளது - என்றுள்ளது. (ச-இ)



# உரும்பிராயில் முன்னெடுக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்

யாழ்ப்பாணம், மே 19

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நேற்று உரும்பிராயில் உணர்வெழுச்சியுடன் முன்னெடுக்கப்பட்டது.

நினைவேந்தல் நிகழ்வு உரும்பிராய் வட்டாரத் தெரிவு பிரதேச சபை உறுப்பினர் கேசவன் தலைமையில், உரும்பிராய் மண்ணின் மைந்தன் விடுதலைத் தியாகி பொன் சிவகுமாரனுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டு ஆரம்பமானது.

நினைவேந்தலைத் தொடர்ந்து முள்ளிவாய்க்கால் கஞ்சியும் வழங்கப்பட்டது. பெருமளவிலான மக்கள் நினைவேந்தலில் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தியதுடன், முள்ளிவாய்க்கால் நினைவு கஞ்சி பருகினர்.

நிகழ்வில் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி சார்பாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. சுரேஷ் பிரேமச்சந்திரனும், இலங்கை தமிழ் அரசுக் கட்சி சார்பாக உரும்பிராய் வட்டாரப் பிரதிநிதி அன்று சுஜீவனும் கலந்து கொண்டனர். (எ-இ)

## மாணவி உயிர்மாய்ப்பு

# ம. உ.ஆணைக்குழுவால் சகலரிடமும் வாக்குமூலம்

கொழும்பு, மே 19

கொட்டாஞ்சேனை மாணவி உயிர்மாய்ப்புச் சம்பவம் தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழு விரிவான விசாரணைகளை முன்னெடுத்துள்ளதுடன் சம்பவத்துடன் தொடர்புடைய சகல தரப்பினரையும் ஆணைக்குழுவுக்கு அழைத்து வாக்குமூலங்களையும் பெற்றுள்ளது.

கொழும்பிலுள்ள பிரபல பாடசாலை ஒன்றில் கல்வி பயின்றுவந்த 15 வயதுடைய மாணவி, அவர் வசிக்கும் தொடர்மாடிக்குடியிருப்பின் 7 ஆவது மாடியிலிருந்து குதித்து உயிர்மாய்த்த சம்பவம் கடந்த ஏப்ரல் மாதம் 29 ஆம் திகதி கொட்டாஞ்சேனை கல்பொத்த வீதியில் இடம்பெற்றது.

சம்பவம் தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு அளிக்கப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைவாக, முழுமையான விசாரணைகளை மேற்கொண்டு, எம்மால் கண்டறியப்பட்ட விடயங்கள் மற்றும் பரிந்துரைகள் உள்ளடங்கிய அறிக்கையை வெகுவிரைவில் சமர்ப்பிப்பதற்கு எதிர்பார்த்துள்ளோம். அதுமாத்திரமன்றி எதிர்வருங் காலங்களில் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறாதிருப்பதை உறுதிசெய்வதற்கு விசேட அவதானம் செலுத்தியுள்ளோம் என்றும் மனித உரிமைகள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது. (ச-இ)

# தகவல் திணைக்களப் பணிப்பாளர் ஊடகவியலாளர்களுடன் சந்திப்பு

கிளிநொச்சி, மே 19

வடக்குக்கு வருகைதந்துள்ள அரசாங்க தகவல் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் எச்.எஸ்.கே.ஜே.பண்டார கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த ஊடகவியலாளர்களை சந்தித்துக் கலந்துரையாடினார். இதன்போது ஊடகவியலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகக் கேட்டறிந்து கொண்டார். (ச-113)



ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

# மரண அறிவித்தல்

தோற்றம் 02 . 08 . 1996

மறைவு 18 . 05 . 2025



## திரு பாலசந்திரன் சசிராஜ்

யாழ் நாச்சிமார் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திரு.பாலசந்திரன் சசிராஜ் அவர்கள் நேற்று (18.05.2025) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் பாலசந்திரன்-ரஞ்சினி தம்பதியரின் மகனும் கவிராஜ், ரோகினி, மிதுன்ராஜ், ருபேகா ஆகியோரின் சகோதரனும் ஜெகனின் மைத்துனரும் காலஞ்சென்ற வர்களான பொன்னுத்துரை-தங்கம்மா, நாகமணி-பூபதிப்பிள்ளை ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.05.2025) திங்கட்கிழமை பிற்பகல் 02.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்
077 471 2023

# 6ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 12 . 07 . 1986

மறைவு 19 . 05 . 2019



## அமரர் திரு. முருகையா முகுந்தராஜ்

வருடம் ஆறு ஆனதடா
எமை விட்டு பிரிந்து நீ
தீராத துயரத்தில் ஆழ்ந்துள்ளோம்
நீ இன்றி நாம் இங்கு
எங்களைத் தவிக்கவிட்டு
இமைகளை நீ மூடிவிட்டாய்!
எம்மையெல்லாம் அழவிட்டு
இறைவனடி நீ சேர்ந்துவிட்டாய்.

நினைவுகளுடன்
குடும்பத்தினர்

## பொறுப்புக்கூறலை...

கனேடிய பிரதமர் வெளியிட்டுள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இன்று நாங்கள் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலின் பதினாறாவது ஆண்டை நினைவுகூரும் தருணத்தில், இலங்கையில் ஆயிரக்கணக்கில் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்ட நாளில், இலங்கையில் நீதி நிலைநாட்டப்பட்ட வேண்டுமென்பதுடன் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்துவதற்கும் அர்ப்பணிப்புடன் செயற்படவேண்டும்.

இந்தத் தமிழ் இனப்படுகொலை நினைவு நாளில் இழந்த உயிர்களைப் பிரிந்த குடும்பங்கள், சீரழிக்கப்பட்ட சமூகங்கள் மற்றும் இன்றுவரை காணாமற்போனவர்களை நாம் நினைவுகூருகின்றோம். அன்புக்குரியவர்களின் நினைவைத் தங்களுடன் சுமந்து செல்லும் கனடாவின் தமிழ்ச் சமூகத்தையும், கனடா முழுவதும் திட்டமிடப்பட்ட பல நினைவுச்சேவைகளையும் நாங்கள் நினைத்துப் பார்க்கிறோம் என்றுள்ளது. (அ-எ-இ)

## தூதுவர்களைச்...

நிலைமை உள்ளது. இந்த வர்த்தமானியை அரசாங்கம் மீளப்பெறவேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுவரும் நிலையில், அதற்கு அரசாங்கத்துக்கு அழுத்தங்களை வழங்கக்கோரி தமிழ்த் தேசியப் பேரவை வெளிநாட்டு இராஜதந்திரிகளுடன் சந்திப்புக்களை நடத்திவருகின்றது. கடந்தவாரம் இலங்கைக்கான பிரிட்டன் தூதுவர், ஐக்கிய நாடுகள் சபையின் தூதுவர், கனேடியத் தூதுவர், இந்தியப் பதில் தூதுவர் ஆகியோரை தமிழ்த் தேசியப் பேரவை சந்தித்திருந்தது. நாளை இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர், சுவிட்ஸர்லாந்துத் தூதுவர், ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுவர் ஆகியோரை தமிழ்த் தேசியப் பேரவை சந்திக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-எ-125)

# மரண அறிவித்தல்



## வேலுப்பிள்ளை சுப்பிரமணியம்

மாதகலைப் பிறப்பிடமாகவும் புளியங்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை சுப்பிரமணியம் அவர்கள் நேற்று முன்தினம் (17.05.2025) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை-நாகம்மா தம்பதியரின் பாசமிகு மகனும் காலஞ்சென்றவர்களான கந்தையா-வேதவனம் தம்பதியரின் மருமகனும் உலகேஸ்வரியின் அன்புக்கணவரும் சரஸ்வதி, சண்முகநாதன் (டென்மார்க்), பாக்கியநாதன் (சுவிஸ்), காலஞ்சென்ற புஸ்பராணி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், வனஜா, தில்லைநாதன் (வசந்தன்) (பிரான்ஸ்), தில்லைநாயகி-வசந்தி (மாவீரர்), தில்லைரூபன் (ரூபன்)(பிரான்ஸ்), காலஞ்சென்ற தில்லைரூபி (வதனி), நவநீதன் (ராஜன்) (லண்டன்), தவபாலன், யோகலிங்கம் (யாதவன்)(பிரான்ஸ்), மங்களேஸ்வரி (வாணி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுதாகரன், ஜெயந்திமாலா, மோகனரூபி, தனுசிகா, பிறேமினி, நிலக்சனா ஆகியோரின் மாமனாரும் டினோயன், துவாரகன், துஷாரகன், மதுசாயினி, கிருத்திகன், தட்ஷா, நிதட்ஷன், நிருத்விகா, ஆருசன், ஆதிரன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.05.2025) செவ்வாய்க்கிழமை பரிசன்குளம் புளியங்குளத்திலுள்ள அவரது இல்லத்தில் இடம்பெற்று முற்பகல் 10.00 மணியளவில் புளியங்குளம்- கல்மடு இந்து மயானத்தில் திருவுடல் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமக

# மரண அறிவித்தல்

தோற்றம் 06 . 02 . 1950

மறைவு 16 . 05 . 2025



## பொன்னுத்துரை செல்வராசா (கராஜ் துரை)

நீர்வேலி சந்தி, நீர்வேலியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை செல்வராசா அவர்கள் (16.05.2025) வெள்ளிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை-தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும், சுப்பிரமணியம்-பராசக்தி தம்பதியரின் பாசமிகு மருமகனும், திலகவதி (திலகம்) அவர்களின் ஆசைக்கணவரும், பிரதீபா, சுரேஸ்குமார், விஜிதா, பகீரதி, இந்துகா, சிந்தியா, ஸ்ரீவித்தியா ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஜெயக்குமார், பிரவீணா, சசிகரன், மயூரன், டினேசன், சிவராஜ், அதிசன் ஆகியோரின் மாமனாரும், அஜின், சுபீன், மனுஸ்ரீ, சேரன், யுவன், நேத்ரா, ஷ்ருதி, ஆருதி, கிஷன், கிஷானா, கிரிஷ், கிஷாரா, கோஷிகன், நீரஜன், ஆதிரா, செழியன், தன்ஷி, ஆகியோரின் பேரனும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.05.2025) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் மு.ப 09.00 மணியளவில் நடைபெற்று 11.00 மணியளவில் நீர்வேலி சீயக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

துரை கராஜ்
நீர்வேலி
077 625 7948

தகவல்:
குடும்பத்தினர்

## மன்னாரில்...

வடைந்துள்ள அந்தச் சடலத்தை அந்தப் பகுதிக்கு நேற்றுமுன்தினம் இரவு மீன்பிடிக்கச் சென்ற மீனவர்கள் அவதானித்துள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் அச்சங்குளம் கிராம அலுவலருக்கு அறிவித்ததை அடுத்து, கிராம அலுவலர் பொலிஸாருக்கும், கடற்படையினருக்கும் தகவல் வழங்கியுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் முருங்கன் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டுள்ளது. (அ-எ-213)

## திடீரென...

தனது சகோதரருடன் வீட்டில் இருந்துள்ளார்.

நேற்றுமுன்தினம் இரவு இவர் தனது நண்பருடன் மது விருந்தில் ஈடுபட்டார் என்றும், நேற்று அதிகாலை வீட்டுக்கு வெளியே வந்தபோது அவர் மயங்கி வீழ்ந்து உணர்வற்றிருந்தார் என்றும் கூறப்படுகின்றது.

அதையடுத்து அங்கிருந்தவர்கள் பொலிஸ் அவசர அழைப்புக்கு அறிவித்ததை அடுத்து, சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் அவரை அம்புலன்ஸில் மருத்துவமனைக்கு அனுப்பியுள்ளனர். எனினும் அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டார் என்று மருத்துவர்கள் உறுதிப்படுத்தினர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. உயிரிழப்புக்கான காரணத்தைக் கண்டறிய உடலில் இருந்து பெறப்பட்ட மாதிரிகள் ஆய்வுக்காகக் கொழும்புக்கு அனுப்பப்பட்டுள்ளன. இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-எ-26)

## பெரமுனவின்...

பக்ச தலைமையில், நாளை 20 ஆம் திகதி இந்த நிகழ்வு நடைபெறும் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

மொட்டுக் கட்சி தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் இது தொடர்பில் அவர்தெரிவித்துள்ளதாவது:-

தேசிய படை வீரர் நினைவு தின நிகழ்வில் ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோர் கட்டாயம் பங்கேற்கவேண்டும். ஜனாதிபதி பங்கேற்கமாட்டார் என எமக்குத் தகவல் கிடைத்த பின்னர், படை வீரர் நினைவு தினத்தை மஹிந்த ராஜபக்ச தலைமையில் நடத்த அனுமதி கோரினோம். அதற்கு அனுமதி வழங்கப்படவில்லை. எனவே மே 20 ஆம் திகதி நாம் படையினரை நினைவுகூருவோம். அதற்குரிய நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மாலை 5 மணிக்கு படையினர் நினைவுத்தூபிக்கு முன்பாக நாட்டுக்குரிய எமது கடமை நிறைவேற்றப்படும். இந்நாட்டை நேசிக்கும் அனைத்து மக்களுக்கும் அழைப்பு விடுக்கின்றோம் - என்றார். (அ-எ-44)

## போர்...

பதி பங்கேற்கமாட்டார் எனவும், பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் தலைமையிலேயே நிகழ்வுகள் நடைபெறும் எனவும் முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

இதற்கு கடும் போக்குடைய சிங்கள தேசியவாத அமைப்புகள் போர்க்கொடி தூக்கின. புலம்பெயர் தமிழர்களைத் திருப்திப்படுத்தவே போர் வெற்றி விழாவை ஜனாதிபதி புறக்கணிக்கின்றார் எனவும் கூறப்பட்டது.

இந்த நிலையிலேயே இன்று நடைபெறும் தேசிய போர் வீரர் நினைவு விழாவில் ஜனாதிபதி அநுர பிரதம அதிதியாகப் பங்கேற்பார் என்று இராணுவ சேவை அதிகார சபையின் தலைவர் பிரிகேடியர் செனரத் கோஹன்ன தெரிவித்தார். (அ-எ-44)

## முள்ளிவாய்க்கால்...

தமிழ் மக்களின் உரிமைகளுக்காக முன்னெடுத்த ஆயுதப் போராட்டம் 2009 ஆம் ஆண்டு பல நாடுகளின் ஆதரவுடன் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது. இறுதிப் போரில் இலங்கை இராணுவம் மேற்கொண்ட கொடூரமான தாக்குதலில் தமிழ் மக்கள் கொத்துக் கொத்தாகக் கொல்லப்பட்டனர். குறுகிய பகுதிக்குள் தமிழ் மக்கள் மீது இராணுவம் நடத்திய எறிகணைத் தாக்குதல்களாலும், விமானத் தாக்குதல்களாலும் ஆயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டனர். தமிழ் மக்களின் மனங்களில் ஆறாத வடுவாக மாறியுள்ள இந்தக் கொடூரப் படுகொலைகள் நடந்து 16 ஆண்டுகள் கழிந்துள்ளன.

இறுதிப்போரில் கொடூரமாகக் கொல்லப்பட்ட தங்கள் உறவுகளை தமிழ் மக்கள் ஆண்டுதோறும் மே மாதம் 18ஆம் திகதி நினைவேந்தி வருகின்றனர். இந்த ஆண்டும் நினைவேந்தலின் பிரதான நிகழ்வு முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தில் உணர்வெழுச்சியுடன் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. தாயகத்தின் ஏனைய பல இடங்களிலும், புலம்பெயர் தமிழ் மக்கள் வாழும் நாடுகளிலும் இந்த நினைவேந்தல் உணர்வுபூர்வமாக நடைபெற்றது.

முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தில் முற்பகல் 10.15 மணியளவில் கொள்கைப் பிரகடனம் வாசிக்கப்பட்டது. முற்பகல் 10.29 மணிக்கு மணி ஒலி எழுப்பப்பட்டு அகவணக்கம் செலுத்தப்பட்டது. முற்பகல் 10.31 மணிக்கு பொதுச் சுடர் ஏற்றப்பட்டு, முள்ளிவாய்க்கால் கீதம் இசைக்கப்பட்டது. சம நேரத்தில் ஏனைய சுடர்கள் ஏற்றப்பட்டன. உயிர்நீத்தவர்களின் உறவினர்கள் தங்களின் உறவுகளை நினைவேந்தி சுடர் ஏற்றிக் கண்ணீர்விட்டுக் கதறியழுதனர். அந்த அழுகைகளால் அந்தப் பகுதியே சோகமயமானது. (அ-எ-இ)

## உயிர்நீத்தவர்களின்...

கைப் பிரகடனம் வெளியிடப்பட்டது.

தேசிய நம்பிக்கையின் உறுதி ண்டு ஒரு குடையின் கீழ் தமிழ் இன க்கு முறைக்கெதிராக தமிழ் இன தலையை நோக்கி முனைப்புடன் ர்ந்து போராட எமது மக்கள் தை நம்பி தொடர்ந்தும் அடிபணி போராடுவோம் என்று கொள்கைப் னத்தில் அறைகூவல் விடுக்கப்பட் து.

மேலும் உள்ளதாவது:-

இன அழிப்பு வரலாற்றுச் செயன் றயூடு முள்ளிவாய்க்காலில் சந்தொட்டு இன்றுடன் 16 ஆண்டு நிறைவடைகின்றன.

று வரைக்கும், கொல்லப்பட்ட இரத் சொந்தங்களுக்கு நினைவு நடுகற்க ளின்றி அவர்கள் ஸ்ரீலங்கா அரசால் ஈவிரக்கமின்றி கொல்லப்பட்ட மண்ணில் அவர்களின் இரத்தம் தோய்ந்த புனித பூமியில் அவர்களின் தேசத்திற்கான கனவுகளை அகவயப்படுத்தி சுதந்திர வேட்கைக்கான மூச்சுக் காற்றுடன் கலந்து எமது இன அடக்குமுறைக்கெதிரான விடுதலைப் போரை வன்முறையற்ற வழியில் முன்னெடுக்க உறுதி பூண முள்ளிவாய்க்கால் திடலில் இன்று ஒன்று கூடியுள்ளோம்.

சிங்களபௌத்த பேரினவாதம் இந்தத்தீவின் சக தேசமான தமிழர்களை அழிக்கவும் அடக்கியாளவும் வெற்றிகொள்ளவும் கடந்த 80 ஆண்டுகளுக்கும் மேலாக திட்டமிட்ட வகையில் செய்துவரும் கட்டமைக்கப்பட்ட இன அழிப்பின் காரணமாக தமிழ்த் தேசம் படிப்படியாக அழிந்துவருகின்றது. இன அழிப்பு எதார்த்தத்தின் விளைவாக எமது இருப்பைப் பாதுகாப்பதற்கும் உரிமைகளைப் பெறுவதற்குமாக எழுந்த அசாத்தியமானதும் ஈகங்கள் நிறைந்ததுமான உரிமைப் போராட்டத்தினதும் விடியலுக்காக ஒரு தேசமாக நாங்கள் அணிதிரண்டு நின்றதற்கானதுமான அடையாளமாகவும் உள்ள முள்ளிவாய்க்காலையும் நாம் இன்று நினைவுகூருகின்றோம்.

19ஆம் நூற்றாண்டில் நவீன சிங்கள - பௌத்த பெருந்தேசியவாதம் காலனித்துவத்தின் அடக்குமுறை உத்திகளை உள்வாங்கி வன்வலுவை பயன்படுத்தி தமிழர் தேசம் மீதான பெரும் போரைத் திணித்தது. அப்போரை மகாவம்ச இதிகாச வரலாற்றுப் புனைவின் விவரணங்களுக்கூடாக நியாயப்படுத்திக் கொண்டது. இந்த வரலாற்று விவரணங்களுள் ஸ்ரீலங்கா ஒற்றையாட்சித் தன்மையை சரியெனக் காட்டி ஏக தேசநாட்டை சிங்கள-பௌத்த நாடாக கட்டமைக்க, பூர்வீக தமிழர் தாயகத்தை அபகரிக்கின்ற அரசியல் செயற்திட்டத்தை முன்னெடுத்தது. 2009ஆம் ஆண்டுக்கு முன்னர் தமிழர் தாயகத்தை அபகரிப்பதற்கு இராணுவ வன்வலுவைப் பயன்படுத்திய கொழும்பு அதிகார மையத்தை கையகப்படுத்திய அரசாங்கங்கள் 2009ஆம் ஆண்டுக்குப் பின்னர் பௌத்த மதத்தையும் அபிவிருத்தியையும் மென் வலுவாகப் பயன்படுத்தி தமிழர் மீதான அடக்குமுறையையும் தமிழரின் பூர்வீக தாயகப் பரப்பான வடக்குக் கிழக்கையும் தொடர்ந்தும் கட்டமைக்கப்பட்ட தமிழ் இன அழிப்பிற்கூடாக அபகரித்துவருவதும் தமிழர் தாயகத்தை சிங்கள பௌத்த மயமாக்குவதும் எம் கண்முன்னே நடந்தேறிக் கொண்டிருக்கின்றன.

21ஆம் நூற்றாண்டில் ஏக துருவ உலக ஒழுங்கிற்கான போட்டி பல முனைகளில் நடைபெற்றுக்கொண்டிருப்பதை அவதானிக்கும்போது ஏக துருவ பேரரசுக் கட்டமைப்பு தனது புவிசார் நலன்களுக்காக எந்த விலையையும் கொடுக்க தயாராகவுள்ளதை அன்று முள்ளிவாய்க்காலும் இன்று பலஸ்தீனமும் வெளிக்கொண்டு வருகின்றது. தமிழ் இனத்தின் அடக்குமுறைக்கெதிரான விடுதலைப் போராட்டம் வெறுமனே ஸ்ரீலங்கா அரசுக்கு எதிரான போராட்டம் மட்டுமல்ல ஏக துருவ பேரரசை கட்டமைக்க முயலும் உலக ஒழுங்கிற்கெதிரான போராட்டமும் என உணர்ந்த மேற்குலக வல்லாதிக்க சக்திகள் ஸ்ரீலங்கா அரசை கருவியாகப் பயன்படுத்தி தமிழ் இன விடுதலைக்கான ஆயுதப் போராட்டத்தை 2009ஆம் ஆண்டு இரும்புக்கரம் கொண்டு மௌனிக்கச் செய்தது. தமிழ் இன அழிப்பில் ஸ்ரீலங்கா அரசு பிரதான குற்றவாளியாக அடையாளம் காணப்பட்டிருந்தாலும் ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம் போன்ற நாடுகள் தமிழ் இன அழிப்பு குற்றப் பொறுப்பில் உடந்தையர்களாக அடையாளம் காணப்பட்டன.

தமிழ் இன அழிப்பு மறுப்பை தற்போதைய அரசாங்கமும் தனது அரசியல் நாடகத்தில் தக்கவைத்துக்கொண்டுள்ளது. இன அழிப்பின் மறுப்பே இன அழிப்பின் இறுதி ஆயுதமாகும் என்ற வரிகள் தற்போது ஆட்சிக் கதிரையில் உள்ளவர்களுக்கும் பொருந்தும் என்பதையும் பதிவிட்டே ஆக வேண்டும். தமிழ் இன அழிப்பை நினைவு கூர்வதற்கான நினைவுச்சின்னங்களைக் கட்டமைக்க தாயகத்தில் மட்டுமல்ல புலம்பெயர் தேசத்திலும் தடையை அமுல்படுத்தி வருகின்றது. தமிழ் இன அழிப்பு பொறுப்புக்கூறலிலும் அதற்கான நீதிப் பொறிமுறையிலும் அநுர அரசாங்கம் தட்டிக் கழிக்கும் போக்கைக் கையாண்டு வருவது பட்டவர்த்தனமாகத் தெரிகிறது. ஸ்ரீலங்காவின் உள்ளூர் விசாரணைப் பொறிமுறையில் நம்பகத்தன்மையை இழந்த ஒட்டுமொத்தத் தமிழ் இனம் 2009 இலிருந்து சர்வதேச விசாரணைப் பொறிமுறையை கோரி வருகின்றது. தமிழ் இன அழிப்புக்கு நீதி வேண்டிய சர்வதேச விசாரணைப் பொறிமுறையின் அவசியத்தை வலியுறுத்துவதற்கான போராட்டங்கள் வினைத்திறனாக முன்னெடுக்கப்பட வேண்டிய காலத்திற்குள் தமிழ் இனம் வலிந்து தள்ளப்பட்டுள்ளது.

தற்போது ஆட்சி அமைத்த அநுர அரசாங்கம் தமிழ் இனத்தின் கூட்டு அரசியல் வேணவாவை புறந்தள்ளி வருவதோடல்லாமல் தமிழ்த் தேசியத்தின் விழுமியங்கள் மீதான நம்பிக்கையை உடைத்துவருகின்றது. அதை ஒரு போர் முறையாக முன்னெடுக்கின்றது. தமிழ் தேசியத்தின் நம்பிக்கை விழுமியங்களை தற்போதைய உலக ஒழுங்குக்கு பொருத்தப்பாடற்றதாக கட்டமைத்து தமிழ் இனத்தின் கூட்டு அரசியல் நம்பிக்கை மீதான உளவியல் போரை கட்டவிழ்த்துள்ளதை அவதானிக்கமுடிகின்றது. தமிழ்த் தேசியத்தின் நம்பிக்கை மீது தொடுக்கப்படும் போர், ஈழத் தமிழினம் முள்ளிவாய்க்காலில் சந்தித்ததைவிட மிகக்கொடூரமான போர். தமிழ் இனத்தின் கூட்டு இருப்பினதும் அதனது அடிப்படைப் பண்புகள் மீதும் தொடுக்கப்படும் போர்.

தற்போது எமக்குமுன் உள்ள வரலாற்றுத்தெரிவு தமிழ்த் தேசியத்தின் மீதான நம்பிக்கையை உறுதிப்படுத்தி அந்தக் குடையின் கீழ் நம்பிக்கை வேறுபாடுகளுடன் அல்ல உத்தி வேறுபாடுகளுடன் ஒன்று கூடுவது. இது எம் இனத்திற்கு வரலாறு தரும் இறுதித் தெரிவாகவும் நோக்க வேண்டி இருக்கும். இந்த வரலாற்றுக் கடமையிலிருந்து தவறுவதை வரலாறு ஒருபோதும் மன்னிக்காது. வரலாறு கொடுக்கும் இறுதிச் சந்தர்ப்பத்தை நழுவவிடாது தமிழ் தேசியத்தின் கீழ் ஒன்று கூடி தமிழ் இன அழிவுக்கான நீதி கோரி அதற்கான பெரு வழி வரைபடத்தை உருவாக்கி எமக்காகவும், எம் தேசத்திற்காகவும், இன விடுதலைக்காகவும் இறந்து போன எம் மறவர்களையும், இரத்த சொந்தங்களையும் நினைவுகூர்வதோடல்லாமல் அவர்களது கனவு நனவாக, இந்த இரத்தம் தோய்ந்த மண்ணிலிருந்து உறுதிபூணுவோம் - என்றுள்ளது. (அ-எ-இ)





# யாழ்.பல்கலைக்கழகத்தில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்

யாழ்ப்பாணம்,மே 19

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு நேற்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வளாகத்தில் அமைந்துள்ள முள்ளிவாய்க்கால் இனவழிப்பு நினைவுத்தூபியில் இடம்பெற்றது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினால் ஏற்பாடுசெய்யப்பட்ட நினைவேந்தலின்போது ஈகைச்சுடர் ஏற்றி மலர்தூவி இறுதிப் போரில் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதில் பல்கலைக்கழக மாணவர்கள், விரிவுரையாளர்கள, ஊழியர்கள் பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ச-27)

# பிரித்தாளும் அரசியலுக்கு காலம் பதில் சொல்லும்!

## அமைச்சர் சந்திரசேகர் தெரிவிப்பு

**கிளிநொச்சி,மே 19**

**அற்ப அரசியலுக்காக இனவாதம் பேசி தேசிய மக்கள் சக்தியையும், தமிழ் பேசும் மக்களையும் பிரிக்க முற்படும் அரசியல் வியாபாரிகளுக்கு காலம் சிறந்த பாடத்தை கற்பிக்கும் என்று கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில் எப்படியான அரசியல் சூழ்ச்சிகள் வகுக்கப்பட்டாலும் மக்களுக்கான அரசியலை முன்னெடுக்கும் தேசிய மக்கள் சக்தியை கைவிட்டுச் செல்வதற்கு தமிழ் பேசும் மக்கள் தயாரில்லை.

உள்ளூராட்சிசபைத் தேர்தலில் தேசிய மக்கள் சக்திக்கு பின்னடைவு ஏற்பட்டுவிட்டதாக அரசியல் களத்தில் எதிரணிகள் தெரிவிக்கின்றனர். உள்ளூராட்சிசபைத் தேர்தல் முடிவை, பொதுத்தேர்தல் முடிவுடன் முடிச்சு போடுகின்றன. கடந்த உள்ளூராட்சிசபைத் தேர்தலுடன் ஒப்பிட்டுபார்த்தால் நிலைமை புரியும்.

அதேபோல தேசிய மக்கள் சக்தி 266 சபைகளைக் கைப்பற்றியுள்ளது. வடக்கிலும் 150 இற்கு மேற்பட்ட உறுப்பினர்கள் தெரிவாகியுள்ளனர். எனவே, பின்னடைவு, வீழ்ச்சி எனக் கூறப்படுவதெல்லாம் அப்பட்டமான பொய். மக்கள் ஆதரவு எமக்கு என்றும் உள்ளது. உண்மையான நல்லிணக்கம் மூலம் தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு இந்த அரசாங்கம் முழு வீச்சுடன் செயற்படுகின்றது - என்றார். (ச-26)



தமிழ் மக்கள் கூட்டணியின் காரைநகர் கிளை ஏற்பாட்டில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வும் தொடர்ந்து தமிழர்களின் உயிர்காத்த முள்ளிவாய்க்கால் கஞ்சியும் நேற்று வழங்கப்பட்டது. காரைநகர் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர்,உபதவிசாளர்,உறுப்பினர்களின் பங்குபற்றுதலோடு உணர்வு பூர்வமாக நிகழ்வு அனுஸ்டிக்கப்பட்டது. (ச-125)

**அர்ச்சகர் தேவை**

காரைநகரிலிலுள்ள பிரபல ஆலயத்திற்கு நித்திய பூஜைக்கு அந்தண அர்ச்சகர்/குருக்கள் தேவை. தகுந்த ஊதியமும், தங்குமிடமும் வழங்கப்படும்.

தொடர்பு: 077 482 2550

**விற்பனைக்கு**

வியாபார நிலையத்திற்கு உகந்த அலுமினிய கண்ணாடி றாக்கை மற்றும் கண்ணாடி சோக்கேஸ்கள் விற்பனைக்கு உண்டு.

T.P - 077 711 1025
076 779 9262 , 077 991 1025

**வேலையாட்கள் தேவை**

கொழும்பு மற்றும் யாழ் நகரில் அமைந்துள்ள PPT நிறுவனத்திற்கு வேலையாட்கள் தேவை.

- முகாமையாளர்
- காசாளர்
- அலுவலக உதவியாளர்
- பேருந்து நடத்துநர்

(உணவு மற்றும் தங்குமிட வசதிகள் வழங்கப்படும்)

தொடர்பு:- 077 386 6250

**வீடு வாடகைக்கு உண்டு**

யாழ்ப்பாணம் பிரதான வீதியில் 4 ஆம் குறுக்குத்தெருவிற்கும் 6 ஆம் குறுக்குத்தெருவிற்கும் இடைப்பட்ட தூரத்தில் இரண்டு அறைகள், சமையலறை, வரவேற்பறையுடன் வீடு வாடகைக்கு உண்டு.

பார்வையிடும் நேரம் மாலை 4.30 இற்கு பின்னர்.

தொடர்பு: 077 900 4515

**மணமகள் தேவை**

யாழ் இந்து 1990 ஆண்டு பிறந்த ரோகினி நட்சத்திரமுடைய செவ்வாய் குற்றமில்லாத பாவம் 16 உள்ள 5' 11' உயரமுடைய கனடாவில் றோயல் வங்கியில் சொப்பையர் பொறியியளராக பணிபுரியும் கனடா பிரயாவுரிமையுடைய மணமகனுக்கு கனடாவிலுள்ளவர்களோ வேறு வெளிநாட்டிலுள்ளவர்களும் சரி தொடர்பு கொள்ளலாம்.

தொடர்பு: 077 976 1221

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111   செய்தி : .news@uthayan.com   விளம்பரம்:advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 19.05.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.